# POST MATRIC SCHOLARSHIP (PMS) for SC, SCA, ST, SCC STUDENTS IN TAMILNADU

## போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை பற்றிய சிறு விளக்கம்:

### 1. போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை என்றால் என்ன?

அண்ணல் அம்பேத்காரால் 1943-ல் கொண்டு வரப்பட்டு கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக மத்திய, மாநில அரசுகளால் சான்றோர்/ ஆன்றோர் (SC/ST- பட்டியல் இன/ பழங்குடி) மாணவ-மாணவிகளுக்காகவும், கிருத்துவ SC மாணவர்களுக்காகவும் “தமிழ்நாடு அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக்” கல்விக்கொடைத் திட்டம் தமிழ்நாடு அரசும் செயல்படுத்தி வருகிற உயர் கல்வி உதவித்தொகைத் திட்டம் இது.

### 2. போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடைத் திட்டத்தின் நோக்கம் என்ன ?

சான்றோர்/ஆன்றோர் (SC/ST) மாணாக்கர்கள் பத்தாம் வகுப்பிற்குப் பிறகு படிக்கக்கூடிய உயர்கல்வி அதாவது 11 ஆம் வகுப்பிலிருந்து முதுநிலை படிப்பு வரை, அந்தப் படிப்பை *‘முடிக்கும்வரை’* முழுக் கட்டணத்தையும் கல்விக்கொடையாக வழங்க வேண்டும்.

### 3. போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை பெறுவதற்கான தகுதிகள் என்ன?

சான்றோர் (SC/SCA), ஆன்றோர் (ST), & கிருத்துவ (SCC) மாணவர்களாக இருக்க வேண்டும். இவர்களது பெற்றோர் *ஆண்டு வருமானம் ரூ. 2.50 லட்சத்திற்கு* மிகாமல் இருக்க வேண்டும். இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.

### 4. என்ன அளவில் கல்விக்கொடை வழங்கப்படுகிறது?

உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட "கல்வி கட்டண நிர்ணயக் குழு" (Fee Fixation Committee) நிர்ணயித்துள்ள கல்விக்கட்டணம் முழுவதுமாகவும், பேணல் படி, புத்தக வங்கியும் கல்விக்கொடையாக வழங்கப்படுகிறது

### 5. என்னென்ன கட்டணங்கள் இந்த கல்விக்கொடையின் கீழ் வரும்?

கல்வி நிறுவனத்திற்கு மாணவரால் *கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய* (Compulsory Payable, non-refundable fee) பதிவுக்கட்டணம், கற்கைக் கட்டணம், விளையாட்டு கட்டணம், நூலகம், பத்திரிக்கை, மருத்துவ பரிசோதனை, மாணவர் சங்கம், கல்விச்சுற்றுலா, ஆய்வேடு தட்டச்சு மற்றும் அச்சிடுவதற்கும், புத்தக வங்கி, இவை அனைத்தும் அடங்கும்.

### 6. ஒரு குடும்பத்தில் எத்தனை பேருக்கு இந்த கல்விக்கொடை வழங்கப்படும்?

சான்றோர்/ஆன்றோர் (SC/ST) ஐச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இந்த கல்வி உதவித்தொகை முழுவதுமாக பாகுபாடின்றி வழங்கப்படும்; உதாரணத்திற்கு ஒரு குடும்பத்தில் 5 பிள்ளைகள் இருந்தால் ஐவருக்குமே முழுவதுமாக கல்விக்கொடை வழங்கப்படும்.

### 7. PMS கல்விக்கொடையாக என்ன/எவ்வாறு கிடைக்கும்?

கற்கைக் (Tuition Fee) கட்டணத்தில் 40% தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத்துறை மூலமும் மீதி உள்ள 60% கல்வி உதவித்தொகையானது ஒன்றிய அரசின் சமூக நீதி அதிகாரமளிப்புத்துறை (Dept. of Social Justice & Empowerment) மூலமும் இரண்டு தவணைகளில் மாணாக்கர் வங்கிக்

கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படும். பேணல் படி (Maintenance Grant) மாணாக்கர் வங்கிக் கணக்கிற்கும், புத்தக வங்கி (Book Bank) கல்லூரி வங்கிக் கணக்கிற்கும் தமிழக அரசின் ஆதி திராவிடர் நலத்துறையால் அனுப்பி வைக்கப்படும்.

**8. எந்தெந்த படிப்புகளுக்கு, எந்த வகைக் கல்லூரிகளுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை வழங்கப்படுகிறது ?**

மத்திய/மாநில பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துப் பாடப் பிரிவுகளுக்கும், அரசு (Govt)/அரசு உதவி பெறும் (Govt Aided) கல்லூரிகள், தனியார் சுயநிதி கல்வி நிறுவனங்கள் (Self-Financing Colleges), நிகர்நிலை Deemed / தனியார் பல்கலைக்கழகங்கள் (Private University) உட்பட அனைத்து வகையான கல்லூரிகளுக்கும் கல்விக்கொடை வழங்கப்படுகிறது.

MBBS/BDS/BSMS/BAMS/BUMS/BNYS/BHMS/B.E/B.Tech/Diploma/M.E/M.Tech, B.Ed/M.Ed, MBA/MCA, இத்தகைய படிப்புகளுக்கு முழுமையான அளவில் கல்விக்கட்டணம் வழங்கப்படுகிறது. ஆனால் பாராமெடிக்கல், இணை மருத்துவம் (Allied Health Care) (B.Sc.Nursing/Pharmacy/BPT/ Allied Health), பட்டய மருத்துவம் (Medical Diploma) பாடங்களுக்கு முக்கால்வாசி அளவிலும், கலை/அறிவியல் (Arts & Science) பிரிவு பாடங்களுக்கும், பிற பாடங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவிலும் கல்விக்கொடை கிடைக்கிறது.

**9. இதற்கான அரசாணைகள் ஏதேனும் உண்டா ?**

ஆதி திராவிடர் நலத்துறை அரசு ஆணை எண் 6 Dt: 9/1/2012, அ.ஆ. எண் 63 Dt: 25/6/2012, அ.ஆ.எண்: 92, Dt:11/9/2012 அ.ஆ.எண்:16 Dt:24/2/2014, அ.ஆ.எண்: 72, Dt: 15/10/2021, அ.ஆ.எண்:96, Dt:25/11/2021, அ.ஆ.எண்:106, Dt:14/12/2021, அ.ஆ.எண்:105, Dt:21/08/2023, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நிர்ணயம் செய்யப்படும் "கல்வி கட்டண நிர்ணயக் குழு" (Fee Fixation Committee) செயல்முறை ஆணை, ஆகிய அரசாணைகளின் படி சான்றோர்/ ஆன்றோர் (SC/ST) மற்றும் கிருத்துவ (SCC) மாணாக்கர்களின் கல்விக்கட்டணத்தை அரசே செலுத்தும். போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை வழிகாட்டி– 2021-2026, சமூக நீதி & அதிகாரமளிப்புத் துறை (Min. of Social Justice & Empowerment) இந்திய ஒன்றிய அரசு.

**10. PMS கல்விக்கொடைக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு ?**

தகுதி உள்ள SC/ST மாணவ-மாணவிகள் கீழ்கண்ட இணைய முகவரி மூலம் இந்த கல்விக்கொடைக்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம் https://tnadtwscholarship.tn.gov.in/

**11. விண்ணப்பிக்க தேவையான சான்றுகள்.**

இனச்சான்றிதழ் (Community Certificate), ஆண்டு வருமானச்சான்று (Income), ஆதார் எண் (Aadhaar Number), ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கு (Bank Account Linked with Aadhaar and Seeding) ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட அலைபேசி எண்( Mobile Number), கல்வி சான்றிதழ்கள். சேர்க்கையின் போது சமர்ப்பிக்கப்படும் வருமானச் சான்று அந்தப் படிப்பு காலம் முழுமைக்கும் செல்லுபடியாகும். வருடா வருடம் புதிதாக சமர்பிக்கத் தேவையில்லை

## I. TUITION FEE (கற்கைக் கட்டணம்)

| S.NO | படிப்பு வாரியாக வழங்கப்படும் கல்விக்கொடை – Private, Self Financing Colleges -சுயநிதி கல்வி நிறுவனங்கள் | | |
|---|---|---|---|
| | படிப்பு | கல்விக்கொடை / வருடம் (Rs) | |
| | | அரசு ஒதுக்கீடு Govt Quota | நிர்வாக ஒதுக்கீடு Management Quota |
| 1 | M.B.B.S, | 4.35 to 4.5 Lakhs | 16.20 Lakh |
| 2 | P.G Medical | 2.2 Lakh | |
| 3 | P.G.Medical (Non Clinical) | 1.6 Lakh | |
| 4 | Pharm D | 2 Lakh | 5.25 lakh |
| 5 | B.D.S | 2.5 lakh | 6 Lakh |
| 6 | M.D.S (Clinical) | 2.5 lakh | 9.5 lakh |
| 7 | M.D.S (Non Clinical) | 2.5 lakh | 3.5 lakh |
| 8 | M.D Homeo | 2.5 lakh | 3.5 lakh |
| 9 | BSMS Siddha /BAMS Ayurveda/ BNYS Naturopathy/ BHMS /BUMS | 1.25 lakh | 2.5 lakh |
| 10 | B.Sc Agri/ Horticulture | 50,000 | 50,000 |
| 11 | B.E/B.Tech/B.Arch | 50,000 | 85,000 |
| 12 | M.E /M.Tech | 50,000 | 50,000 |
| 13 | M.Arch/Plan | 60,000 | 60,000 |
| 14 | MBA/MCA | 41,000 | 41,000 |
| 15 | Diploma/Polytechnic | 35,000 | 35,000 |
| 16 | D.T.Ed/ BPES | 15,000/14,500 | 15,000/14,500 |
| 17 | B.Ed<br>M.Ed | 30000 to 42,000 /38,,000 | 30000 to 42,000 / 38,000 |
| 18 | B.P.Ed/M.P.Ed | 20,000 /22,500 | 20,000 / 22,500 |
| 19 | ITI/Certificate Courses | 13,000 to 16,800 | 13,000 to 16,800 |
| 20 | Dip in Health Inspector/Sanitary Inspector | 35,000 | 70,000 |
| 21 | Dip in General Nursing & Midwifery- GNM | 35,000 | 75,000 |
| 22 | Diploma in Auxiliary Nursing & Midwifery- ANM | 30,000 | 60,000 |
| 23 | D-Pharm, Diploma in Pharmacy | 25,000 | 50,000 |
| 24 | DMLT | 20,000 | 40,000 |
| 25 | B.Pharm | 50,000 | 1,00,000 |
| 26 | B.Sc Nursing | 60,000 | 1,20,000 |
| 27 | B.P.T/B.O.T | 50,000 | 1,00,000 |

| | | | |
|---|---|---|---|
| **28** | **M.Sc Nursing/ M.Pharm/ M.P.T/M.O.T** | **75,000** | **1,25,000** |
| **29** | **U.G Allied Health Sci, MLT, Cardio, OTAT, etc** | **50,000** | **1,00,000** |
| **30** | **P.G Allied Health Science** | **75,000** | **1,25,000** |
| **31** | **U.G Arts & Science (BA/B.Com/B.Sc)** | **1,350 – 4,750 கல்விக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படவில்லை** | |
| **32** | **P.G Arts & Science (MA/M.Com/M.Sc )** | | |
| **33** | **Law / L.L.B** | **85,000** | **85,000** |
| **34** | **Dip in Hotel Management & Catering** | **55,000** | **55,000** |
| **35** | **Ph.D (Full Time only) 1600 Students** | **1 Lakh** | |
| **36** | **Overseas Scholarship (Limited Nos) P.G/Ph.D/PDF courses** | **36 Lakhs, Annual Income below 8 Lakh/ 24 Lakhs, Annual Income below 12 Lakh** | |

## II. MAINTENANCE GRANT (பேணல் படி) / YEAR/ Student

| NAME OF COURSE | Hostellers (Rs) | Day Scholars (Rs) |
|---|---|---|
| **MBBS/BDS/ B.E/Agri/ PG Dip/LLB, etc.,** | **13,500** | **7,000** |
| **B.Pharm, Nursing,B.Ed ,BPT, BOT, MPT, M.Pharm** | **9,500** | **6,500** |
| **Arts & Science B.A, B.Com, B.Sc, M.A, M.Sc, etc.,** | **6,000** | **3,000** |
| **All Diploma/ ITI and +1, +2 class** | **4,000** | **2,500** |

வேண்டுகோள்:. இந்த கல்வி உதவித்தொகையினால் பயன்பெறும் மாணாக்கர்கள் இது பற்றிய செய்தியை பிற மாணவ-மாணவிகளுக்கும், பெற்றோர்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் தெரிவிக்க வேண்டுகிறோம்.

***மேலும் விவரங்களுக்கு;***

திரு.இரா.கிருத்துதாசு காந்தி IAS, Rtd. **|** மா. பரதன் **|** G.சந்திரமோகன்

மேனாள் கூடுதல் தலைமைச் செயலர்.| **9443117665| 9677758358 (WApp)**

இந்த கல்வி உதவித்தொகை தொடர்பாக அணுக வேண்டிய அதிகாரிகள்:

1. அந்தந்த மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரி
2. ஆணையர், ஆதி திராவிடர் நல இயக்குனரகம், சென்னை Ph: 044 28589855
3. செயலர், ஆதி திராவிடர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை *Phone No*: 044 25671848
4. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர், தலைமைச் செயலகம், சென்னை. *Phone No*: 044 25671021
5. Toll free Help line number 1800-599-7638 for scholarship. Monday to Saturday 10 Am to 6Pm

<u>தொகுப்பு</u>**:**

அம்பேத்கர் கல்வி நூற்றாண்டு இயக்கம் (அகம்)**,** சென்னை. 2026-2027